**கொழும்பு – கட்டுநாயக்கா அதிவேகப்பாதை செயற்திட்டம் - 2013**

---

கொழும்பு – கட்டுநாயக்கா அதிவேகப்பாதை செயற்திட்டத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் செயற்திட்டம் எக்சிம் வங்கி மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு என்பவற்றிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட 2009 ஓகஸ்த்து 06 ஆம் திகதிய கடன் உடன்படிக்கைகளின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவர்களாக முறையே முன்னாள் துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சான தற்போதைய நெடுஞ்சாலைகள் உயர்கல்வி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பன உள்ளன. கொழும்பு – கட்டுநாயக்காக அதிவேகப்பாதை செயற்திட்டத்தின் நோக்கமானது, சுமார் 28.5 கிலோ மீற்றர்கள் நீளமான முற்றாக அணுகும் கட்டுப்பாடு மற்றும் பயன்படுத்துவோர் கட்டண வரி விதிப்பு வசதிகளுக்கான ஏற்பாடு என்பவற்றைக் கொண்ட நான்கு வரிசையாக பிரிக்கப்பட்ட அதிவேகப்பாதையை ஒரு மணித்தியாலத்திற்கு 80 கிலோமீற்றரிலிருந்து 100 கிலோ மீற்றர் வரையான வேகமுடையதாக வடிவமைத்துக் காட்டப்படவேண்டும். இந்த செயற்திட்டம் ஆரம்பத்தில் இலங்கை அரசாங்கத்தின் நிதிகளைப் பயன்படுத்தி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 2000 ஒக்தோபரில் ஆரம்பிக்கப்பட்டு 2003 சனவரியில் கைவிடப்பட்டது. நிருமாண வேலைகள் நிறுத்தப்பட்ட நேரத்தில் ரூபா 9,516 மில்லியனான ஆரம்ப மதிப்பீட்டுப் பெறுமதியில் 57 சதவீதத்தைப் பிரதிநி நிதித்துவப்படுத்தும் ரூபா 5,444 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்னர், 2008 ஓகஸ்த்து 14 இல் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அதிவேகப் பாதை நிர்மாணத்தின் வேலைகளை நான்கு ஒப்பந்தங்களாகப் பிரிப்பதற்கும் ஒரு தனிச் செயற்திட்டமாக அமுலாக்குவதற்காக வேண்டியதாக சீன மெற்றோ லொஜீகல் குறூப் கோப்பறேசனுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்கும் அனுமதி வழங்கியிருந்தது. மேலும், அமைச்சரவை 2008 செப்தெம்பர் 11 இல் நடைபெற்ற அதன் கூட்டத்தில், அதிவேகப் பாதையின் நிர்மாணித்திற்காக ரூபா 37,832 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 292 மில்லியனான மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தில் 85 சதவீதமான நிதியளிப்பதற்காக ரூபா 32,120 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர் 248.2 மில்லியனை கடனாகப் பெறுவதற்கு சீனாவின் எக்சிம் வங்கியுடன் நான்கு ஒப்பந்தங்களை செய்து கொள்வதற்கு அனுமதி வழங்கியது. ஆகையினால் கடன் உடன்படிக்கைகள் கடன்கொடுக்கும் முகவருடன் 2009 ஓகஸ்த்து 06 இல் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் நிர்மாண உடன்படிக்கைகள் 2008 ஓகஸ்த்து 17 இல் ஒப்பந்தகாரருடன் கைச்சாத்திடப்பட்டிருந்தன. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2009 ஓகஸ்த்து 18 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2013 ஓகஸ்த்து அளவில் பூர்த்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அதிவேகப் பாதை 2013 ஒக்தோபர் 27 இல் பொது மக்களுக்காக திறந்து வைக்கப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்த நிதிக்கூற்றுக்கள் பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கேற்ப தயாரிக்கப்பட்டு நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக் கூடிய தவறான கூற்றுக்களைக் கொண்டிராத நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து நியாயபூர்வமாகச் சமர்ப்பிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டை வடிவமைப்பதும் அமுலாக்கலும் அதனைப் பேணுதலும், பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகளைத் தெரிவு செய்து பயன்படுத்துவதும், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு போதியளவு கணக்கீட்டு மதிப்பீட்டைத் தயாரிப்பதும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 2. கணக்காய்வின் நோக்கெல்லையும் அபிப்பிராயத்திற்கான அடிப்படையும்

என்னுடைய கணக்காய்வுப் பரிசோதனையை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இவ்வறிக்கையிலுள்ள கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல்வாங்கல்களின் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு உள்ளடக்கத்தைக் கொண்டதாக இருந்தது. நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் கணக்காய்வானது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டது. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினதும் வெளிப்படுத்தல்களினதும் ஆதாரத்திற்கான சான்றுகளின் பரிசோதனை, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் முகாமைத்துவத்தினால் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளையும் குறிப்பிடத்தக்க மதீப்பீடுகளினையும் அத்துடன் அவற்றின் ஒட்டுமொத்த முன்வைத்தலையும் மதிப்பாய்வு செய்தல் என்பவற்றை கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு நோக்கத்திற்கு அவசியமானவை என எனது உயர் அறிவிற்கும் நம்பிக்கைக்குமேற்ப போதிய தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான்பெற்றுக்கொண்டேன் ஆகையினால் எனது அபிப்பிராயத்திற்கான நியாயமான அடிப்படையை எனது கணக்காய்வு வழங்கியதென நான் நம்புகின்றேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள், கொடுக்கல் வாங்கல்கள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் கணக்குப் பதிவேடுகள் என்பவற்றின் அத்தகைய செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்டத்தின் முகாமைத்துவம் தொடர்பாகத் திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பத்தகு தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவாக இருந்தனவா என்பதும்,

(ஆ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடனளிக்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளிற்கிணங்க கடனின் கீழான பற்றுதல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா, என்பதும்,

(உ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தனவா என்பதுமாகும்

## 3. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தெரிவதும் எனது சிறந்த தகவல்களுக்கும் எனக்களிக்கப்பட்ட விளக்கங்களிற்கிணங்கவும் இந்த அறிக்கையின் 5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழக்கூடிய சீராக்கங்களைத் தவிரவும்

(அ) செயற்திட்டம் 2013 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கேற்ப 2013 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள். அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிக்கட்டுப்பாடுகளுடன் இணங்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 4. நிதிக் கூற்றுக்கள்

### 4.1 நிதிசார் செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் கிடைத்த தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்திட்டத்தின் செலவினம் ரூபா 13,453,782,648 தொகையானதுடன் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் ரூபா 47,118,926,777 தொகையாக இருந்தது. மீளாய்வாண்டிற்கான செலவினம் முன்னைய ஆண்டிற்கான செலவினம் மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் என்பவற்றின் பொழிப்பை பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| செலவின விடயம் | திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினம் | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட செலவினம் |
|---|---|---|---|
| | 2013 | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் | 44,080,682 | 357,610 | 44,867,411 |
| செயற்திட்ட முகாமைத்துவம் | 210,027,219 | 52,767,765 | 508,774,177 |
| காணி மற்றும் காணி முன்னேற்றம் | 231,127,040 | 90,053,482 | 2,500,583,216 |
| நடைபெறும் வேலைகள் (அதிவேகப் பாதை) | 12,733,142,731 | 11,058,849,080 | 42,959,398,096 |
| நடைபெறும் வேலைகள் (கட்டிடங்கள்) | 39,245,172 | - | 39,245,172 |
| உசாத்துணை | 196,159,804 | 241,393,079 | 1,022,179,864 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு | | | |

| | | | |
|---|---|---|---|
| மாற்றப்பட்ட சொத்துக்கள் | 3,878,641 | - | 43,878,641 |
| | ------------------------ | ---------------------- | ----------------------- |
| | 13,453,782,648 | 11,443,421,016 | 42,118,926,777 |
| | =========== | ========== | =========== |

## 5. கணக்காய்வு அவதானிப்புக்கள்.

### 5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன் உடன்படிக்கையின் 5 ஆம் உறுப்புரையின் 5.5, 5.6, மற்றும் 5.7 ஆம் பந்திகளின் பிரகாரம் கடன் கொடுக்கும் முகவருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 85,490,056 இற்குச் சமனான ஐ.அ.டொலர் 744,574,05 தொகையான கடன் வசதியின் 0.3 சதவீத முகாமைத்துவ கட்டணம் கடன்காலப்பகுதியின் செலுத்தப்பட்ட ரூபா 84,612,592 இற்குச் சமனான ஐ.அ.டொலர் 725,252 தொகையான கடன் வசதியின் நாளாந்த பயன்படுத்தாத பகுதியின் வருட மொன்றிக்கு 0.3 சதவீத கடப்பாட்டுக் கட்டணம் மற்றும் ரூபா 84,612,592 இற்குச் சமனான ஐ.அ.டொலர் 725,252.16 தொகையான கடன் வசதியில் பயன்படுத்தலுக்காக சம வீதத்தில் 6 சதவீத கடன்கொடுநர் காட்சிப்படுத்தற் கட்டணம் என்பன நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான யப்பான் யென் 45,289,465 இற்குச் சமனான ரூபா 57,427,041கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 20 வாகனங்கள் ஆதன்ம் பொறி மற்றும் உபகரணங்களில் கணக்கிடப்படுவதற்குப் பதிலாக அதிவேகப் பாதையின் நடைபெறும் வேலைகளின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தன. என்று அவதானிக்கப்பட்டது.

## 6. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 6.1 நிதிகளின் பயன்பாடு

மேற்படி, 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு அதிவேகப் பாதையின் முழு நிர்மாண வேலைகளும் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் கடன் உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன கடன் உடன்படிக்கைகளின்படி ஒவ்வொரு பிரிவிற்குமான நிதி ஒதுக்கீடு மற்றும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிதிகளின் பயன்பாடு என்பன கீழே தரப்பட்டுள்ளன.

| ஒப்பந்த இல | சங்கிலி (கிலோ. மீற்றா) | உடன்பட்ட கடன் தொகை | | ஒப்பந்தத்தின் பெறுமதி | | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஐ.அ. டொலர் | ரூபா | ஐ.அ. டொலர் | ரூபா | ஐ.அ. டொலர் | ரூபா |
| i | 0+000 to 4+500 | 70,041,527 | 7,704,567,970 | 82,401,797 | 9,064,197,670 | 70,041,527 | 8,399,101,455 |
| ii | 4+500to 10+900 | 62,573,815 | 6,993,119,650 | 74,792,723 | 8,227,199,530 | 63,573,815 | 7,615,964,831 |
| iii | 10+900to16+800 | 47,801,344 | 5,258,147,840 | 56,236,875 | 6,186,056,250 | 47,801,344 | 5,724,187,052 |
| iv | 16+800+to25+800 | 66,783,314 | 7,346,164,540 | 78,568,605 | 8,642,546,550 | 66,783,314 | 7,991,037,936 |
| | மொத்தம் | 248,200,000 | 27,302,000,000 | 292,000,000 | 32,120,000,00 | 248,200,000 | 29,730,291,274 |

கிடைத்த தகவல்களின்படி, ரூபா 3,120,000,000 இற்குச் சமனான ஐ.அ.டொலர் 292,000,000 ஆன ஒப்பந்தங்களின் மூலப் பெறுமதி இரண்டு தடவையாக ரூபா 41,587,939,430 இற்குச் சமனான ஐ.அ.டொலர் 345,928,359 வரை திருத்தப்பட்டதுடன் அதற்கான வேலைகளின் நோக்கெல்லை வேறுபாடுகள் 2013 யூலை 18 மற்றும் 2014 நவம்பர் 13 ஆகிய இரு சந்தர்ப்பங்களில் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. எனவே, மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைகளின் கிரயத்தை செயல்படுத்துவதற்குச் நிதியளிப்பு ஒழுங்குகள்செய்யப்பட வேண்டுமென வேண்டிக்கொள்ளப்படுகின்றது.

## 6.2 காணிச் சுவீகரிப்புக்கள் மற்றும் மீள் குடியேற்ற நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதி நிர்மாணத்திட்டத்தின்படி, அதிவேகப் பாதை நிர்மாண நோக்கத்திற்காக 2,583 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 2013 திசெம்பர் 31 வரை 2,571 காணித்துண்டுகள் மாத்திரம் சுவீகரிக்கப்பட்டிருந்தன. மேலே குறிப்பிடப்பட்ட சுவீகரிக்கப்பட்ட காணித்துண்டுகளில் 1251 காணித்துண்டுகள் மட்டுமே காணி சுவீகரிப்பு அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின்படி காணிப் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(ii) இந்தச் செயற்திட்டத்தின் கீழ் இடம் பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்றத்திற்காக பெலியகொடயில் மீகாவத்தையில் காணிச்சுவீகரிப்பு நோக்கத்திற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 2001 ஆம் ஆண்டில் ரூபா 1,789,015 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. இந்தக் காணிக்கான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் பெறுமதி சேர் வரி என்பவற்றுடன் ரூபா 2,641,105 ஆன மீதித்தொகை 2012 ஒக்தோபர் 12 இல் செலுத்தப்பட்டிருந்தது. எனினும், சொல்லப்பட்ட அந்தக் காணியின் சொத்துடமை நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கூட மாற்றப்பட்டிருக்கவில்லை. என்று அவதானிக்கப்பட்டது. இந்த நிலமை அந்தக் காணித் துண்டுகளில் மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு சொத்துடைமையை மாற்றுவதில் தாமதத்தை விளைவித்திருந்தது.

(iii) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் நட்டஈட்டுக் கொடுப்பனவின் தீர்ப்பனவுகளில் தாமத்திற்காக செயற்திட்டத்தால் ரூபா 373,104,216 தொகை வட்டி செலுத்தப்பட்டிருந்தது. வட்டிக் கொடுப்பனவுகளில் செயற்திட்டத்தால் ஒன்பது ஆண்டுகளிற்கு மேலாக சில நட்ட ஈட்டுத் தீர்ப்பனவுகளின் தாமத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது.

(iv) 2004 சனவரி 21 இல் பிரசுரிக்கப்பட்ட 1324/19 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் கீழ் சுவிகரிக்கப்பட வேண்டிய காணித்துண்டுகளில் 14 காணித்துண்டுகள் காணிகளின் முன்னைய சொந்தக்காரர்களின் முரண்பாடுகள் காரணமாக 10 ஆண்டுகளிற்கு மேலாக, காணி மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடமிருந்து சுவீகரிக்கப்படவில்லை.

## 6.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இடைக்கால கொடுப்பனவு சான்றிதழ் இலக்கம் 38 மற்றும் 39 இன் கீழ் ஒப்பந்தக்காரருக்கு மேற்கொள்ளப்பட்ட ரூபா 2,058,444,793 தொகையான கொடுப்பனவுகளில் செயற்திட்டத்தால் ரூபா 205,844,479 ஆன பிடிகாசு கழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சேகரிக்கப்பட்ட தகவல்களின்படி, அதிவேகப்பாதைக்கான ஆற்று மணலின் மொத்த தேவை 2,550,000 கியூபிக் மீற்றர்கள் என்று நிர்ணயிக்கப்பட்டதுடன் இலங்கை காணி மறுசீரமைப்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் ஒரு கியூபிக் மீற்றர் ஐ.அ.டொலர் 10 என்ற வீதத்தில் முழுத்தொகையான ஆற்று மண்ணையும் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. எனினும், கூட்டுத்தாபனமானது, ஒரு கியூபிக் மீற்றர்கள் ஐ.அ.டொலர் 10 என்ற உடன்பட்ட விலையில் 600,000 கியூபிக் மீற்றர் வழங்கிய பின்னர் 1,150,000 கியூபிக் மீற்றர்களிற்காக ஐ.அ.டொலர் 11.29 என்ற அலகுவிலையையும் 800,000 கியூபிக் மீற்றர்களிற்காக ஐ.அ.டொலர் 11.48 என்றும் அதிகரிக்க 2011 ஒக்தோபர் 21 இல் தீர்மானித்திருந்தது. விலை அதிகரிப்பு காரணமாக மேலதிக கிரயத்தை தாங்குவதற்கு ஒப்பந்தக்காரர் உடன்படாதமையால் 1,167,473 கியூபிக் மீற்றர்கள் ஆற்று மண் வழங்கியமைக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 256,407,720 ஆன மேலதிகக் கிரயத்தைச் செயற்திட்டம் செலுத்தியிருந்தது. ஆரம்பத்தில் ஆற்று மண்ணின் மொத்த தொகையையும் ஒரு கியூபிக் மிற்றர் ஐ.அ.டொலர் 10 என்ற கிரயத்தில் வழங்குவதாக சம்பந்த தரப்பினர்களால் ஒரு முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டது.

(இ) இலங்கை காணி சீர்திருத்த மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான முத்துராஜவல பிரதேசத்திலுள்ள முறையே 55 ஏக்கர்கள் மற்றும் 25 ஏக்கர்களைக் கொண்ட இரண்டு காணித்துண்டுகள் 2010 ஆம் ஆண்டில் ஒப்பந்தக்காரரின் உபயோகத்திற்காக செயற்திட்டத்தால் குத்தகை அடிப்படையில் சுவீகரிக்கப்பட்டது. ஒப்பந்தக்காரருடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கையின்படி, ஒப்பந்தக்காரரிடமிருந்து மேற்படி இரண்டு காணிகளிற்காக முறையே ரூபா 16.19 மில்லியன் மற்றும் ரூபா 9.34 மில்லியன் ஆண்டுக் குத்தகை கொடுப்பனவை மீளளிப்பதற்கு செயற்திட்டம் இணங்கியிருந்தது. எனினும், கூட்டுத்தாபனம் பின்னர் 55 ஏக்கர்கள் மற்றும் 25 ஏக்கர்களிற்கான ஆண்டுக் குத்தகை கொடுப்பனவை முறையே ரூபா 27 மில்லியன் மற்றும் ரூபா 14 மில்லியன் வரை அதிகரித்திருந்ததுடன் ஒப்பந்தக்காரரிடமிருந்து பின்னர் அதிகரிக்கும் குத்தகை வாடகைகளை கோருவதற்கு உடன்படிக்கையில் ஏற்பாடெதுவும் மேற்கொள்ளப்படாமையின் விளைவாக மீளாய்வாண்டில் வரிகளுடன் ரூபா 20,338,962 ஆன மேலதிகக் கிரயத்தை செலுத்திருயிருந்தது.

## 6.4 மனிதவள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2005 யூலை 01 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் 21 பதவிகளிற்காக 73 உறுப்பினர்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தபோதிலும், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் பதவியணி 53 உறுப்பினர்களைக் கொண்டதாக இருந்தது. மேலும், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அத்தகைய பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிராத போதிலும் நான்கு உசாத்துணையாளர்கள் மற்றும் ஒரு காணி சுவீகரிப்பு அலுவலர் என்போர் நியமிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் சம்பளங்கள் மற்றும் வாகனக் கட்டணங்களாக ரூபா 11,938,187 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எனினும், செயற்திட்ட வேலைகளின் நடவடிக்கைகள் தொடர்பாக செயலாற்றப்பட வேலைகள் பற்றிய அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 விதிவிலக்கான நடவடிக்கைகள்

பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைத்த பெறுவனவுகளில் செயற்திட்டத்தால் செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைதலுடன் நேரடியாகத் தொடர்பற்ற திறப்பு விழாவிற்காக ரூபா 46,393,314 தொகை செலவிடப்பட்டிருந்தது என்று அவதானிக்கப்பட்டது.